கமிட்டியில், அரிசனங்கள் அல்லாத மற்ற எல்லோரையும், அரிசனங்கள் இருக்கக்கூடாது என்ற முறையில், அரிசனங்கள் இல்லாதவர்களைக்கொண்டு தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி அமைக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இளைய பெருமாள் கமிட்டி கொடுத்திருக்கின்ற சிபாரிசுகளைப்பற்றி நான் ஆரம்பத்தில் கூறினேன். சட்ட அமைச்சரவர்களும், நானும் பரிசீலனை செய்து முடிவு செய்யவிருக்கிறோம். பொதுவாக இப்படிப்பட்ட பிரசாரம் செய்ய மாநில அரசாங்கம் ஒரு தனிக் கமிட்டி நியமிக்க உத்தேசித்திருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அப்படிப்பட்ட கமிட்டி நிறுவப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இளையபெருமாள் கமிட்டி செய்த சிபாரிசை ஏற்றுக்கொண்டு தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி நிறுவ அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

குடுமியாமலை விவசாயப் பண்ணை

*86. வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடுமியாமலை விவசாயப் பண்ணையை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் யாது?

(உ) அப்பண்ணை லாபத்தில் அல்லது நட்டத்தில் இயங்கி வருகின்றதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) அப்பண்ணையை மேலும் 1,000 ஏக்கர் பரப்பிற்கு விரிவுபடுத்த வாய்ப்பு இருக்கிறது. பொருத்தமான நிலையில் அது நிறைவேற்றப் படும்.

(உ) அப்பண்ணை ஆதாயத்தில் இயங்கி வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த குடுமியாமலை விவசாயப் பண்ணையையொட்டி, அங்கு ஒரு வேளாண்மை கல்லூரி நிறுவ அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தப் பகுதியில், திருச்சி மாவட்டத்தில் ஒரு கல்லூரி நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முன்னோடித் திட்டமாக குடுமியா மலைப் பண்ணையில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது.

1970 டிசம்பர் 2]

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, இந்த குடுமியாமலே விவசாயப் பண்ணே ஆதாயத்தில் நடந்து வருவதாக அமைச்சரவர்கள் கூறினுர்கள். இம்மாதிரிப் பண்ணேகளேத் தமிழகத்தில் வேறு எங்கேயாவது ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆலோசனே செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்றைக்கு கிட்டத்தட்ட 64 பண்ணேகள் இருக்கின்றன. இதில் மிகப்பெரிய பண்ணே இந்தக் குடுமியாமலேப் பண்ணே. எனவே. ஏற்கெனவே பண்ணேகள் இருக்கின்றன.

Indian Tobacco Development Council

*87 Q. THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Indian Tobacco Development Council had met in the first week of April 1970;

(b) whether the State Government was represented at the meeting; and

(c) if not, the steps taken to secure representation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம். இந்திய புகையிலே அபிவிருத்திக் குழுவின் கூட்டம் சென்னேயில் 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் 3, 4 தேதிகளில் நடை பெற்றது.

(இ) மேற்படி கூட்டத்தில், சென்னே அரசின் பிரதிநிதியாக கூட்டு விவசாய நெறியாளர் கலந்து கொண்டார். மேலும், புகையிலே அபிவிருத்தித் திட்டங்களேச் செயல்படுத்தும் பொறுப் பேற்றுள்ள கிருஷ்ணகிரி தனி மாவட்ட வேளாண்மை அதிகாரியும் (எப். சி.வி. புகையிலே) மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(உ) ஏற்கனவே, இந்திய புகையிலே அபிவிருத்திக் குழுவில் கூட்டு விவசாய நெறியாளர் (வணிகப்பயிர்) தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக இருக்கிருர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலேவரவர்களே, இந்தப் புகையிலே அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்னென்ன? அந்த அபிவிருத்திக் குழுவில் செய்யப்பட்ட பரிந்துரைகளில் அரசு ஏற்றுக் கொண்டவை என்னென்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த அபிவிருத்திக் குழுவில், அதிகப்படியாக தீவிரமான முறையில் புகையிலே சாகுபடி செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிருர்கள். சிகரெட்டிற்கான எப்.சி.வி. புகையிலே இப்பொழுது ஹோசூரில் பயிர் செய்யப்படுகிறது. இன்னும் அதிகப்படியான நிலப்பரப்பிலே செய்யவேண்டுமென்று இந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. பரண்